7

**கடலூர் வணிகவரி மாவட்ட துணை ஆணையர்(வவ)(முகூபொ) அவர்களின்**
**செயல்முறைகள் முன்னிலை: திரு. சி.ஆறுமுகம்**

**நாள்: 12.02.2021.**

**ந.க. அ1/520/2021**

**பொருள்:** பொதுப்பணிகள் - வணிகவரித்துறை - வேலூர் கோட்டம் - கடலூர் வணிகவரி மாவட்டம் - மாநிலவரி அலுவலர் அலுவலகம் - பண்ருட்டி(நகரம்) - திரு.லா.இக்னேஷியஸ் இன்பராஜ் - இளநிலை உதவியாளர் - பணியினை வரன்முறை செய்தல் மற்றும் தகுதிகாண் பருவம் தொடங்கி ஆணை பிறப்பித்தல் - தொடர்பாக.

**பார்வை:**
1. இணை ஆணையர்(வவ), வேலூர் அவர்களின் செயல்முறைகள் ந.க. ஆ2/551/2014 நாள்: 18.09.2014.
2. துணை ஆணையர்(வவ), கடலூர் அவர்களின் செயல்முறைகள் ந.க. அ1/511/2014 நாள்: 24.09.2014.

---------

**ஆணை:**

பார்வை 1 ல் காணும் இணை ஆணையர்(வவ), வேலூர் அவர்களின் செயல்முறைகளின்படி இளநிலை உதவியாளராகப் பதவி உயர்வு அளிக்கப்பட்டு, பார்வை 2 ல் காணும் இவ்வலுவலக செயல்முறைகளின்படி பண்ருட்டி(நகரம்) மாநிலவரி அலுவலர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணி நியமன ஆணை வழங்கப்பட்டு 10.11.2014 முற்பகல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வரும் திரு.லா.இக்னேஷியஸ் இன்பராஜ் என்பவருக்கு அவர் பணியில் சேர்ந்த நாளான 10.11.2014 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

தனியாளர் பணியில் சேர்ந்த நாளான 10.11.2014 முற்பகல் முதல் தகுதிகாண் பருவம் தொடங்கி, மூன்றாண்டுகளில் தொடர்ச்சியான இரண்டாண்டு காலத்திற்குள் அரசு அலுவலக நடைமுறை நூலில் தேர்ச்சி பெறவேண்டும் எனவும், பவானிசாகர் பயிற்சி மையத்தில் நடத்தப்பெறும் சுருக்கப்பட்ட அடிப்படை பயிற்சியில் தேர்ச்சி பெறவேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப்படுகிறது.

(ஒம்/-) சி. ஆறுமுகம்
துணை ஆணையர்(மாவ)(முகூபொ)
கடலூர்

**பெறுநர்**
திரு.லா.இக்னேஷியஸ் இன்பராஜ், இளநிலை உதவியாளர்
மாநிலவரி அலுவலர் அலுவலகம்
பண்ருட்டி(நகரம்)

(அலுவலகத்தலைவர் மூலமாக)
**நகல்:** மாநிலவரி அலுவலர் அலுவலகம், பண்ருட்டி(நகரம்)
**நகல்:** இணை ஆணையர்(வவ) வேலூர் அவர்களுக்கு தகவலின் பொருட்டு பணிந்து அனுப்பப்படுகிறது.
**நகல்:** கோப்புக்கு-1

உண்மை நகல்/உத்தரவுப்படி

மாநிலவரி அலுவலர்/மேலாளர்

12/2/2021